**கருவலகஸ்வெவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கருவலகஸ்வெவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை வாடகை உப ஆவணத்திற்கு அமைவாக ரூபா. 212,738 ஆகவிருந்த போதும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா. 23,734 மிகை அறவீடாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) துருசெவன கடைகளின் கூரை செப்பனிடல், சாலியவெவ பஸ் தரிப்பிடக் கடைகளுக்கு இரும்புக் கதவு பொருத்துதல் மற்றும் காரியாலய உபகரணங்கள் கொள்வனவு ஆகியவற்றிற்கான செலவுகள் முறையே ரூபா. 1,093,013 ஆகவும் ரூபா. 1,192,183 ஆகவும் ரூபா. 88,541 ஆகவும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அலுத்கமை பலநோக்குக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 200,000 இற்காக நிதிக்கூற்றுக்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரம்பேவ நீர் இணைப்பு வழங்கும் திட்டத்தில் நேர் உழைப்பு அடிப்படையின் கீழ் சபையினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா. 645,570 கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 20,166,890 தொகையான 07 கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளில் அதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 592,082 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 7,329,199 தொகையான செலுத்த வேண்டிய 06 கணக்கு மீதிகளில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்படாமல் காணப்படும் ரூபா 925,009 தொகையை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் 129(2)(அ) மற்றும் (ஊ) பிரிவுகள் | 595,444 | பிரதேச சபைக்கு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரைக் கட்டணங்கள் மற்றும் குத்தகை வாடகை முறையற்ற பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 65,300 | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 19 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி செயலாற்றல்

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,366,445 ஆக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,490,368 ஆக காணப்பட்டது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 5,347 | 3,866 | 3,373 | 1,449 | 1,830 | 3,810 | 3,978 | 956 |
| (ii) | வாடகை | 3,777 | 1,438 | 1,331 | 227 | 2,559 | 636 | 582 | 124 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 468 | 149 | 149 | - | 867 | 491 | 491 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,933 | 447 | 447 | - | 5,241 | 5,002 | 5,002 | - |

குறிப்பு * சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ஆண்டின் பட்டியலிடப்பட்ட அறவீடுகள் மற்றும் நிலுவை வருமானத்தின் அறவீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 5,901,616 மற்றும் மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வருமானம் ரூபா 1,076,375 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் 76 சதவீதத்திற்கு சமமான ரூபா 5,301,825 வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட ரூபா 3,867,000 தொகையான வீத வரிகளில் ஆண்டில் 61 சதவீதத்திற்கு சமமான ரூபா 3,373,618 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 956,203 ஆன நிலுவை வீத வரி மற்றும் குத்தகையில் 70 சதவீத்திற்கு சமமான ரூபா 668,314 தொகை ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.2.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) கடந்த ஆண்டிற்காக பட்டியலிடப்பட்ட ரூபா 1,438,448 தொகையான வாடகையில் ஆண்டில் 92 சதவீதத்திற்கு சமமான ரூபா 1,241,110 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 124,372 ஆன நிலுவை வாடகையில் 73 சதவீத்திற்கு சமமான ரூபா 90,672 தொகை ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 07 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமை**

தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த ரூபா 1,155,000 பெறுமதியான 08 செயற்பாடுகளுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்டாமையால் அச்செயற்பாட்டை நிறைவேற்ற முடியாதிருந்தது.

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 103,100,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 11 செயற்பாடுகள் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

2014 நவம்பர் மாதம் ரூபா 1,338,227 செலவில் கழிவு முகாமைத்துவத் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், 2018 ஏப்ரல் வரை சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் கழிவு ஒன்றுசேர்க்கப்பட்டு அகற்றப்படுவதைத் தவிர கழிவு முகாமைத்துவச் செயற்பாடொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் நோக்கி அடைந்துகொள்வற்கு தயார்படுத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் ஆரம்ப செயற்பாடாக பொது மக்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், உணவுப் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, குறைந்த வருமானமுள்ள கிராமங்களை அபிவிருத்தி செய்தல் என்பவற்றுடன் மக்களுக்கு வழங்கும் சேவைகளை செயற்திறனாக்குவதற்கு பொருத்தமான

அலுவலக சூழலொன்றை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் செயன்முன்னேற்றம் என்பன அளவிடக்கூடிய வகையில் சுட்டிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் ஆண்டினுள் அனைவருக்கு சுத்தமான குடிநீரை வழங்குதல், கழிவுப்பொருள் முகாமைத்துவம் மற்றும் மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துதல் போன்ற நோக்கத்திற்குட்பட்ட இலக்குகளை அளவிடுவதற்காக அடிப்படை தரவுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நிர்மாணிக்கப்பட்டிருந்த 16 தொலைபேசிக் கோபுரங்களின் மூலமாக சபைக்குச் கிடைக்க வேண்டிய கட்டணம் ரூபா. 66,000 ஐ அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினுள் தப்போவ வாராந்த சந்தை வருமானமாக ரூபா. 2,100 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், வடமேல் மாகாண வாராந்த சந்தை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டில் ரூபா. 10,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இவ் வாராந்த சந்தை 2017 ஜுன் மாதத்தின் பின்னர் செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை.

(இ) காணாமல் போயிருந்த ரூபா. 45,384 தொகையான நூலகப் புத்தகங்களின் பெறுமதி பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த பொருள் மதிப்பீட்டிற்கமைவாக ரூபா. 67,853 தொகையான காணாமல் போன நூலகப் புத்தகங்களின் பெறுமதி அனுமதியின்றி சொத்துக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

**3.3 மனித வளமுகாமைத்துவும்**

--------------------------------------------------

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கையின் பிரகாரம் சபையின் இரண்டாம் மற்றும் ஆரம்ப தரங்கள் இரண்டிலும் 08 வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

----------------------------------------

**பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------------------------------

2014 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 6,338,227 ஆன கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் மற்றும் நீலபம்ப விடுமுறைக் கேந்திரம் என்பன 03 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டன.

.

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

-------------------------------------------------------

சபையின் அச்சுக்கள் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 137,824 செலவிடப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டிருந்த 8,038 அச்சுக்கற்கள் தரமில்லாமல் இருந்தமையால் சபைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3.6 பெறுகைகள்

### 3.6.1 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

ரூபா. 4,084,978 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சாலியவெவ பஸ் தரிப்பிடக் கடைகளின் தூண்கள் மற்றும் சுவர்களுக்கிடையிலான தொடர்பு விடுபட்டிருத்தல், ஒரு கடையின் நிலத்தின் சீமெந்து மேற்றரையில் வெடிப்பு ஏற்பட்டிருத்தமை மற்றும் பின்புறச் சுவர்களுக்கு சரியான முறையில் பூச்சு பூசப்படாமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் சனவரி முதல் யூன் வரையான காலப்பகுதிக்குரியதாக மாத்திரம் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) வெளிக்கள அலுவலகத்திற்கு கையளித்தலில் நீண்ட கால தாமதம் காணப்பட்டமை. |
| (ஆ) கடன்பட்டோர் | பழைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) கடன்கொடுத்தோர் | பழைய கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஈ) பதவியணியினர் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |